DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No**. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW11** தங்கம் |
| Father's Name/ Husband name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | காவல் ஆய்வாளர் திருமுருகன் பூண்டி காவல் நிலையம் |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 12.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.
( இந்த சாட்சி கானொலி காட்சி மூலம் விசாரிக்கப்டுகிறார். நீதி மன்ற முனையில் சார்பு நீதிபதி, அரசு வழக்கறிஞர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் உள்ளன. ஒருங்ககிணைப்பாளராக இந்நீதிமன்ற பெஞ்ச் கிளர்க் திருமதி. கௌசல்யா உள்ளார். தூரத்து முனையான திருப்பூர் மாண்பமை மாவட்ட நீதிமன்ற கானொலி காட்சி அறையில் ஒருங்கிணைப்பாளராக திரு. தண்டபாணி, உதவி புரோகிராமர், முதன்மை மாவட்ட நீதிமன்றம் திருப்பூர் நியமிக்கப்பட்டுள்ளார். கானோலி மூலம் ஆஜர் சாட்சியின் அடையாள அட்டை காண்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது.)

**முதல் விசாரணை**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. நான் தற்போது திருப்பூர் மாநகர திருமூருகன் பூண்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 2022 ஆம் வருடம் செஞ்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததேன். கடந்த 18.01.2022 அன்று காலை 10.30 மணிக்கு செஞ்சி அரசு மருத்துமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் படி உதவி ஆய்வாளர் திரு. நடராஜன்என்பவர் இவ்வழக்கின் வாதி அக்பர் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அன்றைய தினம் 15.00 மணிக்கு செஞ்சி காவல் நிலைய குற்ற எண். 45/2022 சட்டப்பிரவுகள் 341, 294 பி, 323,324,307 இதச**

உ/இ பிரவு 3 பிபிடிஎல் சட்டத்தின் படி வழக்கு பதிவு செய்து வைத்து இருந்ததை நான் எனது விசாரணைக்கு 16.00 மணிக்கு எடுத்துகொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் காண்டீபன் மற்றும் தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகசர் அ.சா.ஆ. 8 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ – 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன**) பின் சாட்சிகள் அக்பர், அமீர் பாஷா, நூஷெரத், சலீம், ஜமீலா, மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான காண்டீபன், தமிழரசன் ஆகியோரையும் தனித்தனியாக விசாரரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடி சென்றதில் அன்றைய தினம் 21.00 மணிக்கு ஆஜர் எதிரி அபுபக்கர் என்பவரை செஞ்சி பஸ் நிறுத்தத்தில்வைத்து கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தமிழ்செல்வன், சின்ன துரை ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து கையொப்பம் பெற்று அதன் அடிப்படையில் எதிரி அபுபக்கர் தனதுவீட்டிற்கு பின்புறம் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 65 செ.மீ நீளமும், சுமார் 10 செமீ சுற்றளவும் கொண்ட இரும்பு பைப் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் மரக்கட்டைகள் கிடைக்கவில்லை. பின்னிட்டு மேற் சொன்ன எதிரியை நீதிமன்ற காவல் உத்தரவுக்காக தக்க வழிக் காவல் முன்னிலைக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்தான இரும்பு பைப்பை படிவம் 91 மூலம் நீதிமன்ற பாதுகாப்பிற்கு அனுப்பி வைத்தேன். ( ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " என்னை அழைத்து சென்றால்.......... இடத்தை அடையாளம் காட்டி மறைத்து வைதத்துள்ள இரும்பு பைப்பை எடுத்து ஆஜர் செய்வேன்" என்பது அ.சா.ஆ – 10 ஆகவும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ – 11 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ – 12 ஆகவும் இரும்பு பைப் ஒன்று அ.சா.பொ. 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன) . பின் சாட்சிகள் தமிழ் செல்வன், சின்ன துரை ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் வழக்கில் சேதப்படுத்தப்பட்ட பதிவு எண். 16 ஒய் 8736 கொண்ட ஷோண்டா டியோ இருசக்கர வாகனம் மற்றும் டிஎண் 16 டயிள்யூ 6330 பதிவு எண் கொண்ட பல்சர் இரு சக்கர வாகனத்தையும் விசாரணை செய்து புகைப்படம் எடுத்து வழக்கு கோப்பில் சேர்த்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற எதிரிகள் மூவரும் நீதிமன்ற உத்தரவின் படி முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின் வழக்கில் காயம் பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. இளங்கோ என்பவரை 15.02.2022 அன்று திண்டிவனம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேட்டின் பின்புறம் பதிவு செய்யப்பட்ட காயச் சான்றுகள் 2 ஐ பெற்றேன். பின்னர் விசாரணை அடிப்படையில் அன்றை தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 341,294 பி, 323,324,307,326,இ.த.ச மற்றும்

பிரவு 3 தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் செதம் தவிர்த்தல் சட்டத்தின்படி பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்ததேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா. ஆ- 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின் வழக்கு செய்த உதவி ஆய்வாளர் திரு. நட்ராஜன் என்பவரை விசாரித்தேன். இத்துடன் விசாரணை முடித்து மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ்எதிரிகளின்மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

வழக்கில் முதல் அறிக்கை சுமார் 7 மணி நேரம் தாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகள் அபுபக்கர் மற்றும் அமீத் பாஷா ஆகியோர் மருத்துவமனையில் சிக்ச்சைக்கு சேர்ந்த போது காலை 6 மணிக்கு சம்பவம் நடந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது விசாரணையில் இருவரும் காலை 7.45 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். முதல் தகவல் அறிக்கையில் நிகழ்வு நடந்த நேரமாக காலை 8.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேல் கலவாய் கிராமத்தில் இருந்து செஞ்சி மருத்துவ மனைக்கு இரு சக்கர வாகனத்தில் வந்தால் சுமார் 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் நிலையை பொறுத்து மாறுபடும். காயம்பட்ட சாட்சிகள் மருத்துவரிடம் கூறிய நேரப்படி 4 மணி நேரம் தாமதமாக காலை 10.00 மணிக்கு சிக்கைக்கு சேர்ந்ததாக காணப்படுவது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. வழக்கில் புகார் வாக்குமூலம் மருத்துவர் முன்னிலையில் பெறப்பட்டதாக துலங்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் இரு தரப்புக்கும் இடையே என்ன முன் விரோதம் இருந்ததாக தெரியவந்நது என்றால் குழந்தை இல்லாதது தொடர்பாக ஏறப்ட்டட பிரச்சனை தொடர்பான முன் விரோதம் என தெரியவந்தது. உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு 15.00 மணிக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சொல்லி உள்ளார் என்றால் நான் 16.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பார்வை மகசர், வரைபடம், எத்தனை மணிக்கு தயார் செய்ததாக சொல்கிறேன் என்றால் 16.15 மணிக்கு தயார் செய்தேன். வரைபடத்தில் குறிப்பபிடட்பட்டுள்ள மாணிக்கம், சவுகத் அலி, காதர், அனீபா ஆகியோரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் தமிழ்ச்செல்வன் மற்றும் சின்ன துரை ஆகியோர் சம்பவ இட சாட்சிகள் இல்லை என்றாலும் அவர்கள் செஞ்சியை சார்ந்தவர்கள் என்றாலும் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பொது மக்கள் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமுலம் பெறப்பட்டதாக சொல்வது தவறு என்றாலும் எதிரி அபுபக்கர் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் இருந்து இரத்தம் கலந்த மண் எதுவும் கைப்பற்ப்பட்டதா என்றால் இவ்வழக்கிற்கு தேவையில்லை என்பதால் கைப்பற்றப்படவில்லை. வழக்கு சொத்தில் இரத்தம் ஏதாவது இருந்ததா என்றால் இருந்தது. அது மனித இரத்தமா என்று

சோதித்து அறிய தடவியல் துறை சோதனைக்கு அனுப்ப நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து பொது மக்கள் முன்னிலையில் கைப்பற்ற பட வில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கைது செய்யப்பட்ட போதே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. வழக்கு சொத்தில் 23.02.2022 அன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் 19.01.2022 அன்று அனுப்பப்பட்டது. வழக்கு சொத்தை எதிரிகள் பயன்படுத்தினார்களா என்று அறிய கைரேகை நிபுணர் சோதனைக்கு அனுப்பப்பட்டதா என்றால் இவ்வழக்கிற்கு தேவைப்படாததால் அனுப்பப்படவில்லை. வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வழக்கிற்காக அது ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் இரத்தக்கறை படிந்த துணி , சம்பவ இடத்தின் புகைப்படம் மற்றும் சிசிடிவி பதிவு எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் கண்ட 2 இரு சக்கர வாகணங்கள் மற்றும் இறுதி அறிக்கையில் கண்ட இரு சக்கர வாகனம் ஆகியவை மற்றும் நான் எடுத்ததாக சொல்லும் சேதம் அடைந்த வாகனங்களின் புகைப்படம் ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வாகனங்கள் இறுதி அறிக்கையில் வழக்கு சொத்தாக சேர்க்கப்படவில்லை. நான் எடுத்ததாக சொல்லும் புகைப்படத்தை 65 பி சான்றுடன் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். உண்மையில் வாகனம் சேதப்படுத்தப்பட்டிருந்தால் அதை வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கில் கண்ட பிரவு 3 பிபிடிஎல் சட்டத்திற்கான உட்கூறுகளை ஈர்க்கும் சங்கதிகள் எதுவும் இவ்வழக்கின் சாட்சியங்களில் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன வாகனங்கள் யாருக்கு சொந்தமானவை என்று காட்டும் ஆவணம் மற்றும் சேத மதிப்பு சான்று ஆகியவற்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவர் இளங்கோ முதல் உதவி சிகிச்கை மட்டுமே அளித்தவர் என்றால் சரியல்ல. வழக்கில் காயம்பட்டவர்களுக்கு முழுமையான சிசிச்சை அளித்த மருத்துவர் யார் என்றே நான் விசாரரித்து அறியவில்லை என்றால் காயச் சான்று வழங்கிய மருத்துவர் இளங்கோ அவர்கள் தான். காயச் சான்றில் எதன் அடிப்படையில் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் மருத்துவர் சிகிச்சை அடிப்படையில் சான்று அளித்துள்ளார். காயச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் எக்ஸ்ரே பதிவுகளை பெற்று வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. காயத்தின் தன்மை குறித்து நிருபிக்க ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இது குறித்து மருத்துவர் தான் சொல்ல இயலும். வழக்கு சொத்தான இரும்பு பைப்பை மருத்துவரிடம் காண்பித்து கருத்துரை வாங்கினேனா என்றால் தேவைப்படாததால் வாங்கவில்லை. வழக்கில் எதிரிகளை வைத்து அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்பட்டடதா என்றால் தேவைப்படாததால் நடத்தப்படவில்லை. வழக்கிற்கும்

எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட நபர்க்ள இரு சக்கர வாகணத்தில் தவறி விழுந்து ஏற்பட்ட காயத்தை கொண்டு முன்விரோதத்தால் எதிரிகளை பழிவாங்க வேண்டி பொய்யான புகார் வாக்குமூலத்தை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எதிரிகள் மீது தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டதை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.